# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.201/2024

### அ.சா.11(LW 23)

| பெயர் | திரு.தௌசிப் அகமது | தொழில் | உதவி பேராசிரியர் |
|---|---|---|---|
| த/ பெயர் | | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | தேதி | 22.06.2026 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

2,7,8,9 எதிரிகள் ஆஜர். 1,3,4,5,6, எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது. 10,11 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.08.2023 அன்று திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணியிலிருந்த போது திண்டுக்கல் நகர் தெற்கு காவல்நிலைய ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் திண்டுக்கல் நகர் தெற்கு காவல்நிலைய குற்ற எண். 182/2023 வழக்கில் இறந்த அருள் ஆனந்த் பாபு , த/பெ.ஆரோக்கியசாமி என்ற சுமார் 30 வயது மதிக்கத்தக்க ஆண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய திண்டுக்கல் நகர் தெ ற்கு காவல்நிலைய முதல்நிலை காவலர் 1887 திரு. ராம்பாபு என்பவர் பிரேதத்தை அடையாளம் காட்டினார். நான் அன்று காலை 10.05 மணியிலிருந்து 11.15 மணி வரை பிரேத பரிசோதனை செய்தேன்.

**பிரேதத்தின் மீது காணப்பட்ட ஆடைகள் பின்வருமாறு.**

1) Trango,DGL– என்ற முத்திரை கொண்ட நீல நிற பூக்கள் டிசைன் போடப்பட்ட இளஞ்சிவப்பு மற்றும் வெள்ளை நிற அரைக்கை சட்டை அதில் ஆங்காங்கே இரத்தக்கரைகளும், பின்புறத்தில் வெட்டுப்பட்டும் காணப்பட்டது.

2) ஆங்காங்கே இரத்தக் கரைகளுடன் கூடிய ஊதா மற்றும் வெள்ளை நிற கோடுகள் கொண்ட கருப்பு நிற வேட்டி .

3) பின்புறத்தில் இரத்தக்கரைகளும், ஆங்காங்கே வெட்டுப்பட்டு காணப்பட்ட கருப்பு நிற கோடுகள் கொண்ட ஆரஞ்சு நிற கட் பனியன்

4) Odibasஎன்ற முத்திரை கொண்ட இரத்தக்கரைகளும் மற்றும் வெட்டுப்பட்ட கருப்பு மற்றும் சாம்பல் நிற அரைக்கால் சட்டை டவுசர்

5) உடல் மீது மருத்துவதுணியால் போர்த்தப்பட்டு காணப்பட்டது.

**பிரேதத்தின் வெளிப்புற பரிசோதனை**

இறந்த நபர் மிதமான உடல் வாகுடன் காணப்பட்டார். கை மற்றும் கால் நகங்கள் வெளிறி காணப்பட்டது. முகம், இரண்டு கைகள், மற்றும் கால்கள் மற்றும் மார்பு பகுதியில் இரத்தக்கரை படிந்து காணப்பட்டது. மரணவிறைப்பு உடல் முழுவதும் பரவி காணப்பட்டது. பிரேத பரிசோதனை செய்வதற்கு முன்பு பிரேதம் பிணவறையில் குளிர்சாதன அறையில் வைக்கப்பட்டிருந்தது.

பிரேதத்தின் மீது காணப்பட்ட காயங்கள் பின்வருமாறு

1) வலது பாதத்தின் நடுப்புறத்தின் வெளிப்புறத்தில் எலும்பு ஆழம் வரை 4 X 0.5 செமீ அளவில் செங்குத்தாக சாய்ந்த வெட்டுக்காயம் காணப்பட்டது. மேலும் கூராய்வு செய்து பார்த்த போது அதன் கீழே உள்ள Cuboid எலும்பில் 3X 0.2 X 0.2 செமீ அளவில் வெட்டு முறிவு ஏற்பட்டு அதை சுற்றி இரத்தம் கசிந்து காணப்பட்டது.

2) வலது தொடையில் கீழ் பகுதி உட்பக்கத்தில் தசை ஆழம் வரை 3 X 0.5 செமீ அளவில் கிடைமட்ட வெட்டுக்காயம் காணப்பட்டது.

3) வலது தொடையின் கீழ் பகுதியில் வெளிப்புறத்திலும், முன்பக்கத்திலும் எலும்பு ஆழம் வரை 19 X 6-3 செமீ அளவில் கிடை மட்டமாக சாய்ந்த வெட்டுக்காயம் காணப்பட்டது. காயத்தின் ஓரங்கள் நேர்த்தியாகவும், ஒழுங்காகவும் வெட்டப்பட்டிருந்தன. மேலும் அதன் விளிம்புகளில் கன்றி காணப்பட்டது. வலது முழங்கால் சில்லுக்கு 1 செமீ மேலே காணப்பட்டது. மேலும் கூராய்வு செய்து பார்த்த போது வலது தொடை எலும்பின் கீழ் பகுதியில் முழுமையான வெட்டு முறிவு ஏற்பட்டு அதை சுற்றி இரத்தம் கசிந்து காணப்பட்டது.

4) வலது உள்ளங்கையின் பின்பக்க கீழ் பகுதியில் எலும்பு ஆழம் வரை 7 X 3-1 செமீ அளவில் கிடை மட்டமாக சாய்ந்த வெட்டுக்காயம் காணப்பட்டது.

5) வலது உள்ளங்கையின் பின்பக்க மேல்பகுதியில் எலும்பு ஆழம் வரை 3.5 X 1.5-1 செமீ அளவில் கிடை மட்டமாக சாய்ந்த வெட்டுக்காயம் காணப்பட்டது.

6) வலது உள்ளங்கையின் பின்பக்க மேல்பகுதியில் 4.5 X 0.2X 0.1 செமீ அளவில் கிடை மட்டமாக சாய்ந்த வெட்டுக்காயம் காணப்பட்டது.

7) வலது உள்ளங்கையின் பின்பக்க வெளிப்புறத்தில் 2.5 X 0.1X 0.1 செமீ அளவில் கிடை மட்டமாக சாய்ந்த வெட்டுக்காயம் காணப்பட்டது.

8) வலது முன்கையின் பின்பக்க கீழ் பகுதியில் எலும்பு ஆழம் வரை 7.5 X 4.5செமீ அளவில் கிடை மட்டமாக சாய்ந்த வெட்டுக்காயம் காணப்பட்டது. காயத்தின் ஓரங்கள் நேர்த்தியாகவும், ஒழுங்காகவும் வெட்டப்பட்டிருந்தன. மேலும் அதன் விளிம்புகளில் கன்றி காணப்பட்டது. மேலும் கூராய்வு செய்து பார்த்த போது வலது முன்கையின் இரண்டு எலும்புகளும் கீழ் பகுதியில் அரைகுறையான வெட்டு முறிவு ஏற்பட்டு அதை சுற்றி இரத்தம் கசிந்து காணப்பட்டது.

9) வலது நடு விரலின் அடிப்பகுதியில் எலும்பின் ஆழம் வரை 1.5 X 0.5 செமீ அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது. மேலும் கூராய்வு செய்து பார்த்த போது வலது நடுவிரலின் முதல் விரல் எலும்புகளில் முழுமையான வெட்டு முறிவு ஏற்பட்டு அதை சுற்றிலும் இரத்தம் கசிந்து காணப்பட்டது.

10) வலது மோதிர விரல் உருக்குலைந்து காணப்பட்டது. மேலும் கூராய்வு செய்து பார்த்த போது வலது மோதிர விரலில் முதல் விரல் எலும்பு சீரற்ற மற்றும் முழுமையான எலும்பு முறிவு ஏற்பட்டு அதை சுற்றிலும் இரத்தம் கசிந்து காணப்பட்டது.

11) வலது முன்கையின் பின்பக்க மேல்பகுதியில் 9 X 0.1X 0.1 செமீ, 4X 01.X 0.1 செமீ 5X 01.X 0.1 செமீ மற்றும் 7 X 0.1X 0.1 செமீ அளவில் வெட்டுக்காயங்கள் காணப்பட்டது.

12) வலது புஜத்தின் பின்பக்க கீழ் பகுதியில் 5 X 0.1X 0.1 செமீ அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

13) வலது முழங்கையின் முன்பக்கத்தில் 7 X 0.2X 0.1 செமீ அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

14) வலது புஜத்தின் முன்பக்க கீழ் பகுதியில் 4.5 X 0.2X 0.1 செமீ அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

15) வலது புஜத்தின் முன்பக்க மேல் பகுதியில் 6.5 X 0.5X 0.3 செமீ அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

16) வலது புஜத்தின் முன் பக்கம் மற்றும் வெளிப்பக்க நடுப்பகுதியில் எலும்பு ஆழம் வரை 16 X 2 செமீ அளவில் கிடை மட்ட வெட்டுக்காயம் காணப்பட்டது. மேலும் கூராய்வு செய்து பார்த்த போது வலது புஜத்தின் கை எலும்பில் மேல்பகுதியில் முழுமையான வெட்டு முறிவு ஏற்பட்டு அதை சுற்றிலும் இரத்தம் கசிந்து காணப்பட்டது.

17) இடது புஜத்தின் பின்பக்க கீழ் பகுதியில் 9 X 0.2X 0.1 செமீ அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

18) இடது முன்கையின் பின்பக்க மேல் பகுதியில் 5 X 0.2X 0.1 செமீ அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

19) இடது முன்கையின் உட்பக்க கீழ் பகுதியில் எலும்பு ஆழம் வரை 8 X 3 செமீ அளவில் செங்குத்தாக சாயந்த வெட்டுக்காயம் காணப்பட்டது. காயத்தின் ஓரங்கள் நேர்த்தியாகவும், ஒழுங்காகவும் வெட்டுப்பட்டு அதன் விளிம்புகள் கன்றி காணப்பட்து. மேலும கூராய்வு செய்து பார்த்த போது இடது Ulnaமுன் கை எலும்பின் கீழ் பகுதியில் அரைகுறையான வெட்டுக்காயம் ஏற்பட்டு அதை சுற்றிலும் இரத்தம் கசிந்து காணப்பட்டது.

20) இடது பக்க நெஞ்சு பகுதியின் பின் பக்க மேல்பகுதியில் 8 X 0.3X 0.1 செமீ, 6 X 0.3X 0.1 செமீ, 7.5 X 0.5-0.3 X 0.1 செமீ. 9 X 0.1X 0.1 செமீ, 12 X 0.1X 0.1 செமீ, 4X 0.1X 0.1 செமீ, மற்றும் 2.5X 0.1X 0.1 செமீ அளவுகளில் வெட்டுக்காயங்கள் காணப்பட்டது.

21) இடது பக்க நெஞ்சு பகுதியில் பின் பக்க மேல்பகுதியில் தசை ஆழம் வரை 3X 0.8 செமீ அளவில் செங்குத்தாக சாய்ந்த வெட்டுக் காயம் காணப்பட்டது. அதன் கீழ் முனையில் 3 X 0.1X 0.1 செமீ அளவில் கீரல் வால்கோடு காணப்பட்டது.

22) இடது பக்க நெஞ்சு பகுதியில் பின் பக்க மேல்பகுதியில் 7X 2.5X 3 செமீ அளவில் செங்குத்தாக சாய்ந்த வெட்டுக் காயம் காணப்பட்டது. அதன் மேல் முனையில் 4 X 0.2X 0.1 செமீ அளவில் கீரல் வால்கோடு காணப்பட்டது.

23) முதுகின் வலது பக்க மேல்பகுதியில் 7X 0.1X 0.1 செமீ , 9.5 X 0.3X 0.1 செமீ, 8.5 X 0.3X 0.1 செமீ, 11 X 0.1X 0.1 செமீ அளவுகளில் வெட்டுக்காயங்கள் காணப்பட்டது.

24) முதுகின் வலது பக்க மேல்பகுதியில் தசை ஆழம் வரை 6.5X 1.8 செமீ அளவில் செங்குத்தாக சாய்ந்த வெட்டுக் காயம் காணப்பட்டது.

25) முதுகின் வலது பக்க நடுப்பகுதியில் தசை ஆழம் வரை 7.5X 2 செமீ அளவில் செங்குத்தாக சாய்ந்த வெட்டுக் காயம் காணப்பட்டது.

26) முதுகின் மைய நடுப்பகுதியில் தசை ஆழம் வரை 3.5X 1 செமீ அளவில் செங்குத்தாக சாய்ந்த வெட்டுக் காயம் காணப்பட்டது. அதன் உள் முனையில் 19 X 0.1X 0.1 செமீ அளவில் கீரல் வால்கோடு காணப்பட்டது.

27) முதுகின் வலது பக்க கீழ்ப்பகுதியில் தசை ஆழம் வரை 2.5X 1 செமீ அளவில் கிடைமட்டமாக சாய்ந்த வெட்டுக் காயம் காணப்பட்டது.

28) முதுகின் நடுப்பகுதியில் தசை ஆழம் வரை 5X 1 செமீ அளவில் கிடைமட்டமாக சாய்ந்த வெட்டுக் காயம் காணப்பட்டது.

29) முதுகின் நடுப்பகுதியில் தசை ஆழம் வரை 1.8X 0.8செமீ அளவில் கிடைமட்டமாக சாய்ந்த வெட்டுக் காயம் காணப்பட்டது. அதன் உள் முனையில் 8 X 0.1X 0.1 செமீ அளவில் கீரல் வால்கோடு காணப்பட்டது.

30) முதுகின் மைய நடுப்பகுதியில் தசை ஆழம் வரை 4.5X 1 செமீ அளவில் கிடைமட்ட வெட்டுக் காயம் காணப்பட்டது. இதன் வலது முனையில் 11X 0.1X 0.1 செமீ அளவிலும் இடது முனையில் 9 X 0.1X 0.1 செமீ அளவிலும் கீரல் வால்கோடு காணப்பட்டது.

31) முதுகின் மைய நடுப்பகுதியில் 4.5 X 0.1X 0.1 செமீ அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

32) முதுகின் மைய நடுப்பகுதியில் 36 X 0.1X 0.1 செமீ அளவில் நீளமான வெட்டுக்காயம் காணப்பட்டது.

33 ) முதுகின் இடது பக்க கீழ்ப்பகுதியில் தசை ஆழம் வரை 3 X 1 செமீ அளவில் செங்குத்தாக சாய்ந்த வெட்டுக் காயம் காணப்பட்டது. அதன் மேல் மற்றும் உள் முனையில் 7X 0.1X 0.1 செமீ அளவில் கீரல் வால் கோடு காணப்பட்டது.

34) முதுகின் மைய கீழ்ப்பகுதியில் எலும்பு ஆழம் வரை 5. 5 X 1.5 செமீ அளவில் செங்குத்தாக சாய்ந்த வெட்டுக் காயம் காணப்பட்டது.

35) இடது கன்னம், இடது காது மடல், மண்டை ஓட்டின் நெற்றிப்பக்கத்தின் இடது பக்கம், இருபக்க உச்சி பகுதிகள், இருபக்க பக்க வாட்டுப்பகுதிகள் மற்றும் பின் பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய 34 X 28 செமீ பரப்பளவில் மூளை உட்குழி ஆழம் வரை ஒன்றுக் கொன்று மேல்படிந்தவாறு பலத்த வெட்டுக்காயங்கள் காணப்பட்டது. காயங்கள் ஓரங்கள் நேர்த்தியாகவும், ஒழுங்காகவும் வெட்டுப்பட்டு காயத்தின் ஓரங்கய் கன்றி காணப்பட்டது. மேலும் கூராய்வு செய்து பார்த்த போது இடது மேல்தாடை எலும்பு, கீழ் தாடை எலும்பின் இடது பக்கம், மண்டைஓட்டின் இடது பக்க நெற்றி எலும்பு, இரு பக்க உச்சி எலும்புகள், இருபக்க பக்கவாட்டு எலும்புகள் மற்றும் பின் தலை எலும்புகளில் பல வெட்டு முறிவு ஏற்பட்டு அதை சுற்றிலும் இரத்தம் கசிந்து காணப்பட்டது. மூளையின் வெளிச்சவ்வில் பல வெட்டுகள் ஏற்பட்டு காணப்பட்டது. மூளை திசுக்கள் வெளியே கசிந்து காணப்பட்டது. பெருமூளை, சிறுமூளை ஆகிய பகுதிகளில் பல வெட்டுக்கள் ஏற்பட்டு கிழிசல்களுடன் இரத்தம் கசிந்து காணப்பட்டது. மண்டைஓட்டின் அடிப்பகுதியில் இரு நடுக்குழி மற்றும் பின்குழி பரப்புகளில் பல வெட்டு முறிவுகள் ஏற்பட்டு அதை சுற்றிலும் இரத்தம் கசிந்து காணப்பட்டது.

<u>**உடல் உட்புற பரிசோதனை**</u>

மார்பக பகுதியை கூராய்வு செய்து பார்த்த போது விலா மற்றும் மார்பெலும்புகள் சீராக இருந்தது. மார்பு அறை காலியாக இருந்தது. வலது நுரையீரல் 440 கிராம் மற்றும் இடது நுரையீல் 426 கிராம் எடையுடன் சீராக வெட்டுத் தோற்றத்தில் வெளிறி காணப்பட்டது. இருதய உறையில் 9 மிலி வைக்கோல் நிற திரவம் காணப்பட்டது. இருதயம் 285 கிராம் எடையுடன் சீராக வெட்டுத்தோற்றத்தில் இருதயத்தின் அனைத்து அறைகளும் காலியாக இருந்தது. இருதய வால்வுகள் மற்றும் பெரிய இரத்த நாளங்கள் சீராக இருந்தது. இருதயத்தின் இரத்த நாளங்கள் சீராக இருந்தது. உணவுக்குழாய் சீராக இருந்தது. வெட்டுத் தோற்றத்தில் அதன் சீலேட்ட படலம் வெளிறி காணப்பட்டது.

வயிறு மற்றும் இடுப்பு பகுதியை கூராய்வு செய்து பார்த்த போது வயிற்றறை காலியாக இருந்தது. இரைப்பையில் 60 மிலி மஞ்சள் நிற திரவம் எந்த குறிப்பிட்ட நெடியுமின்றி அதன் சீலேட்ட படலம் வெளிறி காணப்பட்டது.

சிறுகுடலில் செரிமானமான உணவுப் பொருள் எந்த நெடியுமின்றி அதன் சீலேட்ட படலம் வெளிறி காணப்பட்டது. பெருங்குடல் மலம் மற்றும் காற்று நிரம்பி காணப்பட்டது.

கல்லீரல் 1410 கிராம் எடையுடன் சீராக வெட்டுத் தோற்றத்தில் வெளிறி காணப்பட்டது. மண்ணீரல் 98 கிராம் எடையுடன் சீராக வெட்டுத் தோற்றத்தில் வெளிறி காணப்பட்டது. வலது சிறுநீரகம் 130 கிராம் மற்றும் இடது சிறுநீரகம் 120 கிராம் எடையுடன் கிராம் எடையுடன் சீராக வெட்டுத் தோற்றத்தில் வெளிறி காணப்பட்டது. கணையம் சீராக வெட்டுத் தோற்றத்தில் வெளிறி காணப்பட்டது. பித்தப்பை பித்தம் நிரம்பி காணப்பட்டது. சிறுநீர்ப்பை காலியாக இருந்தது. பிறப்புறுப்பு சீராக இருந்தது. இடுப்பெலும்பு மற்றும் முதுகெலும்புகள் சீராக இருந்தது. கழுத்துப் பகுதியை கூராய்வு

செய்து பார்த்த போது தோல், தோல் அடி மென் சவ்வு மற்றும் தசைகள் சீராக இருந்தது. குரல்வளை மற்றும் மூச்சுக்குழாய் சீராக இருந்தது. நாவடி எலும்பு மற்றும் குரல்வளை குருத்தெலும்புகள் சீராக இருந்தது.

1) இரைப்பை மற்றும் அதன் உள்ளடக்கங்கள் , சிறுகுடல் மற்றும் அதன் உள்ளடக்கங்கள் , கல்லீரலின் மாதிரி, இரு சிறுநீரகங்களின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு இரசாயன பரிசோதனைக்காக மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு மேற்கூறிய காவலர் மூலம் அனுப்பி வைத்தேன்.

2) இரத்த வகை பரிசோதனைக்காக இரத்த மாதிரி மருத்துவ துணியில் சேகரிக்கப்பட்டு மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு மேற்கூறிய காவலர் மூலம் அனுப்பி வைத்தேன்.

**தற்காலிக கருத்து**

இறந்த நபர் உடலில் ஏற்பட்ட பல வெட்டுக்காயங்களால் உண்டான அதிர்ச்சி மற்றும் இரத்தப் போக்கு காரணமாக இறந்திருக்க கூடும் என மேற்கூறிய காயங்கள் அனைத்தும் இறப்பிற்கு முந்தைய காயங்கள் என்றும் அவை இறப்பிற்கு சில நிமிடங்களுக்கு முன்பு ஏற்பட்டவை என்றும் மேற்கூறிய காயங்கள் அனைத்தும் ஒருவருக்கு இறப்பை ஏற்படுத்த போதுமானவை என்றும் மேற்கூறிய காயங்கள் கனமான , கூர்மையான விளிம்புகளை கொண்ட ஆயுதங்களால் ஏற்படுத்தக்கூடும் என்றும் இறந்த நபர் பிரேத பரிசோதனை செய்வதற்கு 12 முதல் 24 மணி நேரத்திற்குள் இறந்திருக்க கூடும் என்றும் உள்ளுறுப்புகளில் இரசாயன பகுப்பாய்வு அறிக்கைக்காக இறுதி கருத்து நிலுவையில் வைக்கப்பட்டு தற்காலிக கருத்துரையுடன் நான் பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கினேன்.அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

கடந்த 11.09.2023 அன்று நான் பணியிலிருந்த போது மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட உடல் உறுப்புகளின் இரசாயன பகுப்பாய்வு அறிக்கையில் இரைப்பை அதன் உள்ளடக்கங்களில் 290மிலி கிராம் சதவீதம். சிறுகுடல் மற்றும் அதன் உள்ளடக்கங்களில் 138 மிலி கிராம் சதவீதம் மற்றும் கல்லீரல் ,சிறுநீரகங்களில் அதன் உள்ளடக்கங்களில் 167 மிலி கிராம் சதவீதம் எத்தில் ஆல்கஹால் கண்டறியப்பட்டது என அறிக்கையில் இருந்தது. அந்த இரசயான பகுப்பாய்வு அறிக்கை **அ.த.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனவே மேற்கூறிய தற்காலிக கருத்துரையான இறந்த நபர் உடலில் ஏற்பட்ட பல வெட்டுக்காயங்களால் உண்டான அதிர்ச்சி மற்றும் இரத்தப் போக்கு காரணமாக இறந்திருக்க கூடும் என மேற்கூறிய காயங்கள் அனைத்தும் இறப்பிற்கு முந்தைய காயங்கள் என்றும் அவை இறப்பிற்கு சில நிமிடங்களுக்கு முன்பு ஏற்பட்டவை என்றும் மேற்கூறிய காயங்கள் அனைத்தும் ஒருவருக்கு இறப்பை ஏற்படுத்த போதுமானவை என்றும் மேற்கூறிய காயங்கள் கனமான , கூர்மையான விளிம்புகளை கொண்ட ஆயுதங்களால் ஏற்படுத்தக்கூடும் என்றும் இறந்த நபர் பிரேத பரிசோதனை செய்வதற்கு 12 முதல் 24 மணி நேரத்திற்குள் இறந்திருக்க கூடும் என்பதுடன் இறந்த நபர் இறப்பின்

போது மது போதையில் இருந்தால் என நான் கருத்து தெரிவித்து இறுதி அறிக்கை வழங்கினேன். நான் வழங்கிய இறுதி அறிக்கை **அ.த.சா.ஆ.12.** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் அரிவாள்கள் மற்றும் கத்திகளால் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் சேர்ந்து ஒரு நபரை வெட்டினால் மேற்கண்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் வாய்ப்புள்ளது.

**2 முதல் 7,10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பிரேதத்தின் மீது எடுக்கப்பட்ட ஆடைகளை முதல் நிலை காவலர் ராம்பாபு என்பவர் எடுத்தாக ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரேதத்தின் மீது இருந்த காயங்கள் என்ன பொருளினால் ஏற்பட்டிக்க கூடும் என என்னிடம் ஆய்வாளர் பொருளையோ, புகைப்படத்தையோ காட்டி கருத்துரை எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். பிரேத பரிசோதனை அறிக்கையை நான் நீதிமன்றத்திற்கு நேரடியாக அனுப்பவில்லை என்றால் சரிதான், நான் துறைத்தலைவரிடம் அறிக்கை சமர்ப்பித்தேன்.

**8,9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**1,11எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.06.23 21:29:52 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.